RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt20320

# திருவள்ளுவரின் பண்பாட்டுச் சூழலியல் கொள்கை

கோ. ராஜேஷ்வரி [அ, *]

[அ] தமிழியல்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி- 627012, தமிழ் நாடு, இந்தியா.

# Thiruvalluvar’s Concept of Cultural Ecology

G. Rajeswari [a, *]

[a] Department of Tamil Studies, Manonmaniam Sundaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.

* Corresponding Author: gsr5882@gmail.com

Received : 08-03-2020
Accepted : 17-06-2020

## ABSTRACT

Thirukkural, global literature does not only talk about human behaviours which are to be glorified. It also proposes bright cut ideas about the relationship between humans and nature. The attention of the modern world is on environmental issues. The fast developments due to science and technology resulted in destroying nature. Due to industrial-based products and for the sake of the sophisticated life of the modern man, we left the nature for destruction. And now humanity faces the consequences. It is a general truth that the literature reflects the social issues of that time of its outcome. One can notice that the recent creative literature of Tamil talks about environmental aspects of the globe and the local areas. Thirukkural also deals with the issues of nature and it proposes the ideal relationship between man and nature, which is the concern of this paper. Thiruvalluvar says that the whole world depends on water. All the activities in the world cannot be possible if the rain fails. All the activities of living creatures, including humans, depend on water. Start with food production and leading to every activity are depends on rain. So Tiruvalluvar concludes that the relationship between humans and nature depends on water i.e. is rain. The paper concludes that the concept of Thiukkural towards nature is the dependency of humanity.

**Keywords:** Tiruvalluvar, Thirukkural, Cultural Ecology, Nature,

## About the Author



**Dr. G. Rajeswari** is presently working as an assistant professor at the department of Tamil Studies, Manonmaniam Sundaranar University, Tirunelveli. She started her academic carrier as an assistant professor in 2008 at Udaya College of Arts and Science, Vellomodi and had 10 years of teaching experience in the same institution. She did her Doctoral Degree from Manonmaniam Sundaranar University in 2016. She has published 5 research papers in international journals, two in national level journals and two more in conference proceedings. She has also attended three national-level workshops and many conferences both national and University levels. She has received 5 awards to her research credit and established herself as a good academician.

## முன்னுரை

உலகப் பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள் மனித நடத்தைமுறைகள் எவ்வாறு இருப்பது சிறப்பு என்பதை எடுத்துரைப்பதோடு நின்றுவிடவில்லை. இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவுகளைப் பற்றியும் தெளிவானக் கருத்துக்களை முன்வைக்கின்றது. இன்றைய உலகம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்தே பெரிதும் கவலைப்படுகின்றது. நவீன யுகத்தில் அறிவியலின் அசுர வளர்ச்சியால் கடுமையாகப் பாதிப்படைந்தது சுற்றுச்சூழலே. மனிதனின் சொகுசு வாழ்க்கைக்காகவும் மனித உழைப்புக்கு மாற்றாக இயந்திரம் சார்ந்த உற்பத்தியை முதன்மைப்படுத்தியதின் விளைவாகவும் இயற்கை அழிவை நோக்கி நகர்ந்தது. இதன் விளைவுகளை மனிதக் குலம் இன்று சந்தித்து வருகின்றது. பொதுவாக இலக்கியங்கள் அவை தோன்றும் காலக்கட்டங்களின் சமுதாயச் சிக்கல்களைப் பற்றிப் பேசும் என்பது கருத்து. தமிழிலும் அண்மைக்காலங்களில் வெளிவரும் படைப்பிலக்கியங்களில் சுற்றுச்சூழல் பற்றியக் கருத்தாடல்களைக் காணலாம். சங்க இலக்கியம் இயற்கையை முதன்மைப்படுத்தியது. அற இலக்கியங்களும் இயற்கை குறித்த அறங்களையும் புரிதல்களையும் முன்வைத்தன. இவ்வகையில் திருக்குறள் விதிவிலக்கல்ல. திருக்குறளும் பண்பாட்டுச் சூழலியல் பற்றிப் பலக் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளது. திருக்குறள் முன்வைக்கும் இயற்கை குறித்த புரிதல்களையும் கொள்கைகளையும் இனங்கண்டு விளக்க இக்கட்டுரை முயல்கின்றது.

## ஆய்வு எல்லை

திருவள்ளுவரின் திருக்குறளே ஆய்வு எல்லையாகும். இந்த ஆய்வு பண்பாட்டுச் சூழலியல் தொடர்பானது என்பதால் இயற்கை பற்றிப் பேசும் குறள்கள் மட்டுமே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## ஆய்வுப்பொருள்

சங்க இலக்கியங்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதால் அவற்றைத் திணை இலக்கியம் என்று அழைக்கின்றோம். இந்தக் காலகட்டத்தை ஆ.வேலுப்பிள்ளை இயற்கைநெறிக் காலம் என்று குறிப்பிடுகின்றார் (Veluppillai, 1978). தமிழில் நிலைத்திருந்த இந்த மரபு இன்று மேற்கத்திய உலகத்தினரால் இயற்கை இலக்கியம் (Green Literature) என்று அடையாளப்படுத்தப்படுகின்றது. இயற்கைதான் படைப்பிலக்கியத்தின் ஆதாரம் என்று நம்பப்பட்டதும் உண்டு. வேட்ஸ்வொர்த், கீட்ஸ், ஷெல்லி, பைரன், மில்டன் போன்ற உலகப் புகழ்பெற்ற கவிஞர்கள் இயற்கையை இரசிப்பதிலும் வருணிப்பதிலும் புகழ்பெற்றவர்களாக இருந்தனர். இது ஒருவகையான அழகியல். ஆனால் தமிழின் திணை இலக்கியம் இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவுகளை முதன்மைப்படுத்தியது. இயற்கையை இரசிப்பதைவிட அதை வாழ்க்கையாக அடையாளப்படுத்தியது தான் திணை இலக்கியங்களின் சிறப்பு ஆகும். ஆற்றுப்படை இலக்கியங்கள் வரையிலும் இந்த மரபு

நீடித்தது. காப்பியக் காலத்தில் இந்த மரபு இயற்கையை வருணிப்பதாக மாறியது. நாடு வருணனை, நகர் வருணனை போன்றவை இயற்கையை இரசனைப் பொருளாக மாற்றியது. சிற்றிலக்கியக் காலத்தில் மீண்டும் இயற்கையோடு மனிதன் உறவாடும் வாழ்க்கை பேசப்பட்டது. குறிப்பாக பள்ளு, குறவஞ்சி இலக்கியங்களைச் சுட்டலாம். இவ்வாறாகத் தமிழ் இலக்கியங்கள் இயற்கை குறித்து ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வெவ்வேறுவிதமான கருத்தோட்டங்களைக் கொண்டனவாக அமைந்துள்ளன. தமிழிலக்கியத்தின் இந்த நீண்ட மரபில் அறஇலக்கியங்கள் குறிப்பாகத் திருக்குறள் இயற்கையை எவ்வாறு அணுகியது என்பதைச் சில சான்றுகளுடன் காணலாம்.

## முறையியல்

இலக்கியங்கள் பதிவு செய்யும் சுற்றுச்சூழல் தொடர்பான செய்திகளை ஆய்வு செய்ய பண்பாட்டுச் சூழலியல் என்னும் கருத்தாக்கம் பேசப்படுகின்றது. “மனிதச் சமூகத்திற்கும் இயற்கைக்குமிடையிலான உறவை விளக்குவதே பண்பாட்டுச் சூழலியலாகும். மனிதச் சமூகமும் பண்பாடும் தகவமைத்தலின் (Adaptation) உற்பத்திப் பொருட்களாக அல்லது விளைவுகளாக ஒரு குறிப்பிட்ட இயற்கைச் சூழலில் வெளிப்படுகின்றன என்பதே பண்பாட்டுச் சூழலியலின் அடிப்படைக் கருத்தாகும். பண்பாடு என்பது இயற்கைச் சூழலில் தன்னைத் தகவமைத்துக் கொள்வதற்காக வகுத்துக் கொள்ளும் வாழ்க்கை முறையே எனப் பண்பாட்டுச் சூழலியாளர்கள் நம்புகின்றனர்” (Charlotte, 1995). இந்த உறவு நிலையைப் புரிந்து கொள்ள கீழ்க்குறிப்பிடும் கருத்தமைவுகளை முன் வைக்கலாம். அவை: 1. சார்ந்திருத்தல் (Dependency) 2. பிரதிபலித்தல் (Reflection) 3. போலச் செய்தல் (Imitation) என்பனவாகும். சார்புத் தன்மை என்பது தன்னிறைவின்மையின் வெளிப்பாடாகும். தன் தேவைகளைத் தானே நிறைவு செய்ய இயலாமல் பிறிதொன்றின் துணையை நாடும் நிலையே சார்புத்தன்மை ஆகும். மனிதச் சமூகமும் அது வாழும் சுற்றுச் சூழலும் அல்லது இயற்கையும் சார்புடையவை. பண்பாட்டுச் சூழலியல் என்ற கொள்கையின் அடிப்படையில் திருக்குறள் முன்வைக்கும் இயற்கை மனிதச் சமூக உறவு எத்தகையது என்பதைச் சிலச் சான்றுகளின் வழி காணலாம்.

## திருக்குறளும் பண்பாட்டுச் சூழலியலும்

கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து திருவள்ளுவர் அமைத்த அதிகாரம் வான்சிறப்பு என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குறளின் உள்ளடக்கம் இங்கிருந்துதான் தொடங்குகின்றது. ஏன் வான்சிறப்பை முதலில் திருவள்ளுவர் அமைத்தார் என்பதற்கு எண்ணற்ற விளக்கங்கங்கள் உள்ளன. சங்ககாலத்தின் உச்சகட்ட வளர்ச்சி மருதநிலம் சார்ந்த உற்பத்தியாக அமைந்தது. தமிழ்ச் சமூகம் வேளாண் சமூகமாகவே இருந்தது. திருவள்ளுவரும் வேளாண் சமூகத்தையே பின்புலமாகக் கொண்டு மனித நடத்தைமுறைகளையும் சமுதாய மதிப்புகளையும் பண்பாட்டு மதிப்புகளையும் பேசுகின்றார். எனவே வான்சிறப்பு இரண்டாவது அதிகாரமாக அமைக்கப்பட்டது என்பது அக்காலச்

சமூகத்தின் அசைவியக்கங்கள் அனைத்தும் வேளாண்மையைச் சார்ந்திருந்தது என்பதாலேயே என உணரலாம்.

வான்சிறப்பில் பத்துக் குறள்கள் உள்ளன. மழை, மழையின் சிறப்பு, மேகம், கடல், உழவர், உழவுத் தொழில், உணவு, பசி ஆகியவற்றைப் பேசிவிட்டுத் திருவள்ளுவர் பத்தாவது குறளில் இயற்கை குறித்த தனது கொள்கையை வெளிப்படுத்துகின்றார் (Devaneya Paavanar, 2017).

"நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்

வான்இன்று அமையாது ஒழுக்கு" **(குறள். 20)**

எப்படிப்பட்ட மேலானவர்களும் நீரில்லாமல் உலகியல் நடைபெறாது. மழையில்லாமல், அந்நீர் இடைவிடாமல் ஒழுகும் ஒழுக்கும் அமையாது என்பது இக்குறள் தரும் பொருள் ஆகும். நீரின்றி அமையாது உலகு என்று உலகிற்கு அல்லது உயிர்கள் அனைத்திற்கும் நீரே முதன்மையானது என்று குறிப்பிடுகின்றார் (Munisamy, 1992). நீரும் அதனைத் தரும் வானமும் பூமியில் வாழும் உயிருக்கு அடிப்படை என்பதையே இக்குறள் தெளிவுப்படுத்துகின்றது. பூமியில் வாழும் அனைத்து உயிர்களும் நீரை நம்பியிருக்கின்றன. உலகத்தில் நிகழும் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் நீரே அடிப்படை என்பதைத் திருவள்ளுவர் இந்தக் குறளில் பதிவு செய்துள்ளார் (Devaneya Paavanar, 2017). அதாவது அனைத்து உயிர்களும் இயற்கையைச் சார்ந்தே வாழ்கின்றன என்பது கருத்து. இயற்கையைச் சார்ந்திராமல் எவ்வுயிரும் வாழ இயலாது என்ற கொள்கையைத் திருவள்ளுவர் முன்வைக்கின்றார் (Munisamy, 1992).

மனிதச் சமூகமும் பண்பாடும் தகவமைத்தலின் உற்பத்திப் பொருள்களாக அல்லது விளைவுகளாக ஒரு குறிப்பிட்ட இயற்கைச் சூழலில் வெளிப்படுகின்றன என்பதே பண்பாட்டுச் சூழலியலின் அடிப்படைக் கருத்து எனக் கண்டோம். பண்பாடு என்பது இயற்கைச் சூழலில் தன்னைத் தகவமைத்துக் கொள்வதற்காக வகுத்துக் கொள்ளும் வாழ்க்கைமுறையே எனப் பண்பாட்டுச் சூழலியலாளர்கள் நம்புகின்றனர் (Charlotte, 1995). பண்பாட்டுச் சூழலியலாளர்கள் முன்வைக்கின்ற இக் கருத்தியலின் அடிப்படையில் திருவள்ளுவரின் நீரின்றி அமையாது உலகு என்னும் வரிகளை அர்த்தப்படுத்தினால் திருவள்ளவரின் இயற்கை குறித்தப் பார்வை புலப்படும். உயிர்கள் இயற்கையைச் சார்ந்தே வாழ இயலும் என்ற அறிவியல் உண்மையின் அடிப்படையிலேயே இக்குறள் அமைந்துள்ளது. வேளாண்மைச் செய்யத் தகுந்த ஓர் இயற்கைச் சூழலில் தன்னைத் தகவமைத்துக் கொண்டதே தமிழர் வாழ்வியல் எனப் பண்பாட்டுச் சூழலியல் அடிப்படையில் புரிந்து கொள்ளலாம்.

சார்ந்திருத்தல் என்பது பண்பாட்டுச் சூழலியலில் இன்றியமையாதக் கருத்தக்கமாகும். இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவில் சார்ந்திருத்தல் முதன்மையானது. மனிதன் இயற்கையைச் சார்ந்திருக்கின்றான். ஆனால் இயற்கை மனிதனைச் சார்ந்திருப்பதில்லை. "மனித வாழ்வுக்கு இயற்கை உயிர் ஆதாரம். நீர், நிலம், காற்று, நெருப்பு, வான்வெளி ஆகிய பஞ்சபூதங்கள் மனித வாழ்க்கையோடு நெருக்கமான

உறவுடையவை. எனவே பஞ்சபூதங்கள் வழிபாடு, சடங்குகள், நம்பிக்கைகள், புராணங்கள் என மனிதப் பண்பாட்டில் பரவிக்கிடக்கின்ற..............இயற்கையை அல்லது தான்வாழும் சுற்றுச் சூழுலைச் சார்ந்திருத்தல் என்பது மனிதச் சமூகத்தின் தவிர்க்க முடியாத உறவுநிலையாகும்" (Stephen, 2017). வானம் மழை தருவதால் உலகில் உள்ள அனைத்து உயிர்களும் நிலைபெறுகின்றன, உண்பவர்களுக்கும் உண்பிப்பவர்களுக்கும் உணவு தந்து தானும் உணவாகும் மழை, வேண்டுங் காலத்தில் மழை பெய்யாவிட்டால் உலக உயிர்களைப் பசி துன்புறுத்தும், உரிய காலத்தில் மழை பெய்யாவிட்டால் ஏரினால் உழவர் உழமாட்டார், கெடுப்பதும் கொடுப்பதும் மழை, மழைத் துளிகள் விழாவிட்டால் பசும் புற்களின் நுனியைக் காணுதல் அரிது, கடல் நீரை உறிஞ்சும் மேகம் கடலில் மழையாகக் கொட்டாவிடில் கடல் தன் தண்ணுமையை இழந்துவிடும், மழை பெய்யாவிட்டால் வானவர்களுக்கும் பூசை நடக்காது, மழை பெய்யாவிட்டால் இவ்வுலகில் தானம், தவம் ஆகிய இரண்டு அறங்களும் நடக்காது என்று நீரைச் சார்ந்து மனிதக்குலம் எவ்வாறு இயங்குகின்றது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார் (குறள் 11- 20) (Munisamy, 1992).

வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பத்துக் குறள்களின் கருத்துக்களே மேலே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறளும் ஒரு கருத்தை வலியுறுத்துகின்றது. சமூக வாழ்வியலின் அனைத்து அசைவுகளும் நீரைச் சார்ந்துதான் இயங்குகின்றன என்பதை இக்குறள்கள் சுட்டடிக்காட்டுகின்றன. இவை அனைத்தையும் ஒருசேர இணைத்து ஒட்டுமொத்தக் கருத்துத் திரளாக வடித்து இறுதி குறளில் திருவள்ளுவர் தனது இயற்கை குறித்த கொள்கையாக நீரின்றி அமையாது உலகு என்று முன்மொழிந்துள்ளார். பத்துக் குறள்களும் மனித வாழ்க்கை எவ்வாறு இயற்கையைச் சார்ந்து இயங்குகின்றது என்பதைப் புலப்படுத்துகின்றன. உழவுத் தொழில், இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் உணவு, உணவின்கண் நீங்கும் பசி, வளமை காரணமாக நிகழும் தானம், தவம் ஆகிவை அனைத்தும் சங்கிலித் தொடர்போல் மழையின் காரணமாக நிகழ்பவை. இவையனைத்தும் மழையைச் சார்ந்து இயங்குபவை. வேளாண் சமுதாயம் நீரைச் சார்ந்து தான் இயங்க இயலும். சங்க காலத்திலேயே வேளாண் சமுதாயம் நீரின் இன்றியமையாமையை உணர்ந்ததன் காரணமாகவே உணவெனப்படுபது நிலத்தோடு நீரே (புறம்.18:21) என வரையறுத்தது (Swaminatha Iyer , 1971). உணவு உற்பத்தியில் மனிதக்குலம் நீரைச் சார்ந்தே இயங்குகின்றது என்பதைச் சங்காலம் முதற்கொண்டு இலக்கியங்கள் பதிவு செய்து வந்துள்ளன.

விருந்தோம்பலைப் பற்றிப் பேசும் போது இல்வாழ்க்கையின் நோக்கம் பிறருக்கு உதவி செய்து இல்வாழ்ந்து விருந்தோம்பல் செய்தற்பொருட்டே என 81 ஆவது குறளில் குறிப்பிடுகின்றார். திருக்குறளில் 23 ஆவது அதிகாரம் ஈகை பற்றியது. ஈகை வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது. வேளாண்மையின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உணவே ஈகையின் மூலம் வழங்கப்படுகின்றது. குறியெதிர்ப்பை என்று 221 ஆவது குறளில் குறிப்பிடப்படுவது கவனத்திற்குரியது.

“வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்

குறியெதிர்ப்பை நீரது உடைத்து” **(குறள்** 221)

யாதொரு பொருளும் இல்லாதவர்களுக்கு ஒன்றினைக் கொடுப்பதே ஈகையாகும். அப்படிப்பட்டவர்கள் அல்லாதவர்க்குக் கொடுப்பது பின்வரும் பயனைக் கருதிக் கொடுக்கும் தன்மையுடையதாகும் என்பதே இக்குறளின் பொருளாகும் (Munisamy, 1992). குறியெதிர்ப்பை என்று இக்குறளில் குறிப்பிடப்படுவது தானியக் கடனாகும். சங்க இலக்கியத்திலும் இது குறிப்பிடப்படுகின்றது. “ஒரு குடும்பத்தின் சேமிப்பில் இருந்த தானியம் (வரகு, தினை) கடனாக வழங்கப்பட தனக்குத் தேவை ஏற்பட்டபோது அதனைத் திரும்பப்பெற இயலாமல் வருத்தமுற்ற செய்தியைப் புறம்.33(9-11)-ஆம் பாடல் குறிப்பிடுகின்றது (Swaminatha Iyer, 1971). கடனாகப்பெற்ற தானியத்தைக் கடன் பெற்றவர் திருப்பிக் கொடுக்கவேண்டும். இதனையே மேற்குறித்த பாடல் குறியெதிர்ப்பு என்று குறிப்பிடுகின்றது. தானியங்களைக் கடனாகப் பெறும் வழக்கம் தற்போதும் தமிழகத்தில் பரவலாக வழக்கில் உள்ளது குறிப்பிடத்தக்கது. காணிக்காரர்களிடமும் இவ்வழக்கம் உள்ளது. வேளாண் தோல்வி, இயற்கை அழிவு, வனவிலங்குகளால் ஏற்படும் சேதம், சேமிப்புத் தானியம் அழிந்து போதல் போன்ற சூழல்களில் தானியங்களைக் கடனாகப் பெறுவது காணிக்காரர்களிடம் காணப்படும் வழக்கமாகும். தானியக்கடன் என்பதும் ஒரு பொருளியல் பரிவர்த்தனையே. ஒரு குடும்பம் அல்லது சில குடும்பங்கள் சேர்ந்து உற்பத்தி செய்து சேமித்து வைத்திருக்கும் தானியத்தைக் கடனாக வழங்குகின்றது என்பது மிகை உற்பத்தியைச் சுட்டுவதாகும். மேலும் உணவு என்பது பாதீடு செய்வதற்குரியது என்ற இனக்குழுச் சமூக விழுமியம் வலுவிழந்து அது உற்பத்தி செய்பவனுக்குச் சொந்தமானது என்ற விழுமியமாக மாற்றமடைந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது” (Stephen , 2017). விருந்தோம்பல், ஈகை, குறியெதிர்ப்பு ஆகிய மூன்றையும் வேளாண் உற்பத்தியை மையமாகக் கொண்டே திருவள்ளுவர் பேசுகின்றார். எனவே இது சார்புத் தன்மையின் வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை.

சார்ந்திருத்தல் என்பது தன்னிறைவற்றது எனப் பொருள்படும். மழை வழங்காவிடில் தானம், தவம் ஆகிய இரண்டும் நடவாது என்பது ஒரு குறள் கருத்து (குறள் 19). தானம், தவம் ஆகிய இரண்டும் உற்பத்தி மிகுதியாக இருந்தால் மட்டுமே நிகழ இயலும். எனவே இவை இரண்டும் உற்பத்தியை அல்லது நீரைச் சார்ந்திருப்பவை. இதனைப் போன்றே திருவள்ளுவர் குறிப்பிடும் அனைத்துச் சமுதாயச் செயற்பாடுகளும் நீரைச் சார்ந்து இயங்குபவை (Munisamy, 1992). அதாவது உணவு உற்பத்தியை மையமாகக் கொண்டு அமைந்தவை. இங்கே இயற்கைக்கும் மனிதச் சமூகத்திற்கும் இடையிலான உறவு என்பது சார்புத் தன்மையாகும். மனிதன் இயற்கையைச் சார்ந்து வாழ்ந்துதான் ஆக வேண்டும். “மழை அதனை நம்பி செய்யப்படும் உணவு உற்பத்தி ஆகிய இரண்டும் சார்புடையவை. சமூக வாழ்வில் மழையைச் சார்ந்து என்ன இயக்கங்கள் அமைந்துள்ளன. உணவு உற்பத்தி, விருந்தோம்பல், ஈதல், செல்வம், வழிபாடு என அதன் பரிமாணங்கள் பல. இவை அனைத்தும் மழை பொய்த்தால் பாதிப்படைகின்றன. இந்தச் சார்புத்தன்மையைத் தான் திருக்குறள் கொடுப்பதும் மழை கெடுப்பதும் மழை எனக் குறிப்பிடுகின்றது“. இயற்கை

பொய்த்தால் மொத்த சமுதாய வாழ்வியலே பாதிப்படையும் என்பதையே வான் சிறப்பைத் தொடர்ந்து வரும் பல அதிகாரங்கள் வலியுறுத்துகின்றன. மனிதனின் சமுதாய வாழ்க்கையும் அதனைச் சுற்றி உருவாக்கப்பட்டிருக்கும் பண்பாட்டுக் கூறுகளும் நீருக்கும் நிலத்துக்கும் இடையிலான உறவுகளோடு தொடர்புடையவை.

பண்பாட்டுச் சூழலியலில் போலச் செய்தல் என்பது மற்றொரு கருத்தாக்கமாகும். போலச் செய்தல் என்பது வேட்டைச் சமூகத்தில் மந்திரச் சடங்காகத் தோன்றியத் தொல் வடிவம் ஆகும். இயற்கையைக் கட்டுப்படுத்த ஆதிகால மனிதன் உருவாக்கிய மந்திரம் போலச் செய்தலின் அடிப்படையிலானது என்று மானிடவியலாளர் கருதுகின்றனர். “மனிதன் இயற்கையிலிருந்து எண்ணற்ற தொழில்நுட்பங்களைக் கண்டறிந்தான். இதற்குப் ‘போலச் செய்தல்’ என்னும் கருத்தே அடிப்படைக் காரணமாகும். இயற்கையில் அமைந்து கிடைப்பதைப் போன்று தனக்கும் சில அடிப்படைத் தேவைகளை அவன் உணர்ந்தான். இதனை அவன் நிறைவேற்ற முயன்றதிலிருந்தே தொழில்நுட்பம், பண்பாடு, நாகரீகம் ஆகியவை வலம் வரத்தொடங்கியது. பறவைகளின் கூடு வீடு கட்டுவதற்கும், சிலந்தியின் கூடு ஆடை நெய்வதற்கும், மீன்களின் இயக்கம் படகு கட்டுமானத்திற்கும், பறவைகளின் உடல் அமைப்பு ஆகாய விமானத்தின் கண்டுபிடிப்பிற்கும், வௌவ்வாலின் எதிரொலி இயக்கம் ரேடார் கண்டு பிடிப்பிற்கும் பெருந்துணை செய்தன என்பர். இயற்கையின் இயல்பான இயக்கத்தில் சில மனிதனின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்து அதனைத் தனது கட்டுக்குள் வைத்துக் கொள்ளும் தொழில்நுட்பமாக மாற்றிக் கொண்டனர். சிக்கிமுக்கிக் கல்லின் கண்டு பிடிப்பு இதனை நன்கு விளக்கும்”. மனிதன் இயற்கையிலிருந்து தன் வாழ்வியல் தேவைகளுக்குப் பலவற்றைக் கற்றுக்கொள்கின்றான். பல தொழில்நுட்பங்கள் இயற்கையிடமிருந்து கற்றுக் கொண்டவையே. இயற்கையைப் போலச் செய்வதன் மூலம் கற்றுக் கொள்ளும் எளிய நுட்பங்கள் நாகரீக வளர்ச்சியால் வியக்கத்தகு தொழில் நுட்பங்களாகியுள்ளன. திருக்குறளிலும் போலச் செய்தலை அடிப்படையாகக் கொண்ட இயற்கை குறித்த உறவுகள் பேசப்பெற்றுள்ளன.

நீர்வளமும், நிலவளமும் ஒரு நாட்டிற்கு இன்றியமையாதவை. உயிர் வாழ்க்கைக்கு நீரும், நிலமும் அடிப்படையானவை. இவ்வளங்களைக் காப்பதும், பெருக்குவதும் மனித வாழ்க்கைக்குத் தேவை என்பதைச் சிறுபஞ்சமூலம், ஏலாதி, திரிகடுகம், நாலடியார் ஆகிய அறஇலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இதன் அடிப்படையிலேயே திருக்குறள் அரண் என்பதை வலியுறுத்தும்போது,

“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்” **(குறள்.742).**

என்று கூறுகின்றது (Devaneya Paavanar, 2017). வற்றாத நீரும், பரந்த நிலமும், வளமான மலையும், குளிர்ந்த நிழல் உடைய காடும், அரணுக்குத் தேவை என்பதை இக்குறள் குறிப்பிடுகிறது. போரின் போது அரண் முற்றுகையிடப்பட்டாலும், உயிர் வாழ்வதற்குத் தேவையான அனைத்து வளங்களும் அதனுள் இருக்க வேண்டும் என்பதே இதன்

அடிப்படையாகும். நீர்வளமும் நிலவளமும் வாழ்விடங்களுக்கு அருகில் அமைத்தல் என்பது இயற்கையைப் போலச் செய்தல் ஆகும். வளமான இடங்களில் வாழ்ந்த மனிதன், நாடு என்னும் அமைப்பை உருவாக்கியதும், இயற்கை வளங்கள் நிறைந்த பகுதியில் மட்டும் வாழ்விடம் அமைவது நெகிழ்ந்து போனது. எனவே, வாழிடத்தில் இயற்கை வளத்தைப் பெருக்குவது என்பது அறமாகமாறியது". இயற்கையைப் போலச் செய்தல் என்பதே வாழிடத்தில் இயற்கை வளங்களைச் செயற்கையாக உருவாக்குவதாகும்.

போரின் போது காலம் தொடர்பான கணிப்புகள் எவ்வளவிற்கு இன்றியமையாதவை என்பதைத் திருக்குறள் காலம் அறிதல் என்னும் அதிகாரத்தில் விரிவாகப் பேசுகின்றது. போரிடுவதற்கு வீரம், மனத்திட்பம், அஞ்சாமை, உடல்வலு ஆகியவை மட்டும் போதுமானதன்று. படைபலத்தை மட்டும் ஒரு வேந்தன் நம்பி போரில் இறங்குவது மதிநுட்பம் அன்று என்பதைத் திருவள்ளுவர் மிக நுட்பமாக ஒரு குறளின் மூலம் பேசுகின்றார்.

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்

வேந்தர்க்கு வேண்டும் பொழுது" **(குறள் 481)**

இவ்வதிகாரத்தின் முதல் குறளே இதுதான் (Munisamy, 1992). கோட்டான் காகத்தைவிட விலிமையானது. கூரிய நகங்களைக் கொண்டது. ஆனால் பகல் பொழுது எனில் காகம் கோட்டானை வெல்லும். கோட்டான் வலிமையுடையதாக இருப்பினும் அது இரவில் மட்டுமே தன்வலிமையை வெளிப்படுத்த இயலும். இதனைப் போன்றே பகைவரைத் தாக்கக் கருதும் வேந்தன் காலம் குறித்த அறிவுடையவனாக இருத்தல் வேண்டும். ஓர் உயிரினம் மற்றொரு உயிரினத்தைத் தாக்க அல்லது தோற்கடிக்க காலத்தைக் நுட்பமாகக் கவனிக்கின்றது. கோட்டானால் பகலில் இயங்க இயலாது என்பது காக்கையின் பலம். காக்கை கோட்டானைத் தாக்க வேண்டுமெனில் அது பகற்பொழுதையே தெரிவு செய்யும். பகற்பொழுதில் கோட்டானைத் தாக்கும் காகமே வெற்றிபெறும் என்பது உறுதி. காகத்தின் வெற்றிக்கு அடிப்படையாக அமைவது அதன் பலம் என்பதைவிட அது தெரிவு செய்த காலம் என்பதே வெளிப்படையான உண்மை. படையைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தும் வேந்தனுக்கு இந்த அறிவு வேண்டும் என்பதையே குறள் குறிப்பிடுகின்றது. இந்த அறிவு இயற்கையிலிருந்து பெற்ற போலச்செய்தல் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

பண்பாட்டுச் சூழுலியல் என்னும் கருத்தாக்கம் இலக்கியங்களில் பதிவாகியுள்ள செய்திகளைக் கொண்டு மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவை விளக்க முயல்கின்றது. திருக்குறளில் அமைந்திருக்கும் வான்சிறப்பு என்னும் ஓர் அதிகாரத்தை முதன்மையாகக் கொண்டு பண்பாட்டுச் சூழலியல் குறித்த திருவள்ளுவரின் கொள்கைகளை அடையாளங்காண முயலப்பட்டது. இதற்குச் சார்ந்திருத்தல், போலச்செய்தல் என்னும் கருத்தாக்கங்கள் பயன்படுத்தப்பெற்றன. திருக்குறள் மனிதச் சமூகம் இயற்கையைச்

சார்ந்திருக்கிறது என்பதைத் தெளிவாக முன்நிறுத்தியுள்ளது. இயற்கைச் சார்பைத் திருவள்ளுவர் நீரை மையமாகக் கொண்டு பேசியுள்ளார் என்பதும் அறியப்படுகின்றது. சார்புத் தன்மையையே திருக்குறள் மிகுதியாகப் பேசுகின்றது. இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவில் சார்புத் தன்மையே பெரும்பான்மை என்பதைக் குறள் சுட்டிக்காட்டுகின்றது. போலச் செய்தலும் சில குறள்களில் பதிவாகியுள்ளன. இயற்கையிடமிருந்து பெற்ற அறிவை நாகரிக வளர்ச்சிக்கும் போர் தொழில் நுட்பத்திற்கும் பயன்படுத்தியுள்ளான் என்பதைச் சில குறள்கள் பதிவு செய்துள்ளன. இருப்பினும் இயற்கையைச் சார்ந்து இயங்குவது குறித்த பதிவுகளே மிகுதி என்பது குறிப்பிடத்தக்கது. திருவள்ளுவர் இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவில் ஒன்றை ஒன்று சார்ந்து இயங்குதல் என்னும் இயற்கையின் விதியையே முன்வைக்கின்றார் எனக் கருதலாம்.

## References


Charlotte, (1995), Seymour (Ed.), Dictionary of Anthropology, The Macmillan Press, London.

Devaneya Paavanar, G., (Commentator), (2017), Thirukkural, Sree Hindu Publications, Chennai, India.

Munisamy, V., (Commentator), (1992), Thirukkural Thelivurai, Thirukkuralar Pathippagam, Chennai.

Stephen G., (2017), Illakkiya Inavaraiviyal, New Century Book House, Chennai, India.

Swaminatha Iyer U.Ve., (Commentator), (1971), Pura Naanuuru Moolamum Uraiyum, U.Ve. Sa. Noolagam, Chennai, India.

Veluppillai, A., (1978), Tamil Ilakkiyathil Kalamum Karuthum, Paari Puthakap Pannai, Chennai, India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


## About the License:


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License